
# விம்பம்

# 6

## மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி




### உயர்தர மாணவர் ஒன்றியம் - 2016

# விம்பம்

உயர்தர மாணவர் ஒன்றியம் – 2016

மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | :- | விம்பம் |
| வெளியீடு | :- | மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி உயர் தர மாணவர் ஒன்றியம் |
| பதிப்பு | :- | 26.06.2016 |
| அட்டைப்படம் | :- | ஆசிரியர் திரு. J.T. சிம்சன் |
| கணினி தட்டச்சு | :- | செல்வன்.ய.சஜீவன் |
| | | செல்வி.ச.மெரின் பெயாற்றா |
| அச்சுப்பதிப்பு | :- | Nothern Printers Jaffna |
| பொறுப்பாசிரியர் | :- | ஆசிரியர் திரு. சூ. அன்ரன் சில்வெஸ்ரர் |

# கல்லூரிக் கீதம்

தரணியோர் பலர் புகழ்
கலை நெறி வளரும்
தலமெனத் திகழும் இலங்கை
கலகல நெல் நிறை
மாந்தையில் ஞான்றும்
கலை வளர்க்கல்லூரி இதுவே
தருமருள் நெறியிலே வளர்ந்திட தினமுமே
தாழ் பணிந்திடுவோம் பாதம்
புகழ் கூறுவோம் பரமனுக்கே
புகழ் கூறுவோம் பரமனுக்கே
புது மலர் தூவியே புகழ்வோம்
நின்றொழி வீசிடும் எங்கள் கல்லூரியை
நேசித்து நிதம் பாதுகாப்போம்
ஜெயமே ஜெயமே ஜெயமே
ஜெய ஜெய ஜெயம் பெறவே
யேசு கைத் தாதையும்
நண்பர் அந்தோனியும்
என்றும் எமைக் காப்பாரே
ஏந்திடும் துவசங்கள் நீலம், பச்சை, சிகப்பு
எமக்கே வெற்றியைத் தருமே
ஏந்தலர் துணையும் ஏனையோர் துணையும்
என்றென்றும் எமக்கே பெருக
புகழ் கூறுவோம் பரமனுக்கே
புகழ் கூறுவோம் பரமனுக்கே
புது மலர் தூவியே புகழ்வோம்
நின்றொழி வீசிடும் எங்கள் கல்லூரியை
நேசித்து நிதம் பாதுகாப்போம்
ஜெயமே ஜெயமே ஜெயமே
ஜெய ஜெய ஜெயம் பெறவே
ஜெய ஜெய ஜெயம் பெறவே
ஜெய ஜெய ஜெயம் பெறவே

## *விம்பத்தினுள்...*


- இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து
- ஒன்றியத் தலைவரின் சிந்தனையிலிருந்து
- பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி
- அதிபரின் வாழ்த்துச் செய்தி
- பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி
- பங்குத் தந்தையின் ஆசியுரை
- குருக்களின் ஆசியுரை
- பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி
- வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
- முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி
- ஆசிரியர்கள் கவியாரம்
- மாணவர்கள் கவியாரம்
- அம்மா
- பிரிவு
- செம்மொழியாம் தமிழ் மொழி
- மீண்டும் பள்ளியில் நான்
- வியர்வையில் பெற்ற உயர்வு
- சிந்தனைத் துளிகள்
- பள்ளிப் பருவம்
- விடைபெறும் நேரத்தில் ஒரு சில நினைவுகள்
- உலகில் காணப்படும் நிறுவனங்களும், இடங்களும், ஆண்டுகளும்.
- பள்ளி
- தமிழ் மொழி
- துன்பச்சுமை
- நவீன பாரதியார் பாடல்
- The value of reading
- நன்றியுரை

## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து



மாந்தை பிரதேசத்தில் கருங்கண்டல் பகுதி கலை விவசாய வர்த்தகத்துறையின் மையமாகத் திகழ்கின்றது கல்வி வளம் மிகுந்த மத்தியஸ்தானமாக கல்வி, கலை, விளையாட்டு போன்றவற்றிலும் சிறந்த பங்களிப்பை எமது கல்லூரி ஆற்றி வருகின்றது

மன்/கருங்கண்டல் மகா வித்தியாலயத்தில் உயர் தர மாணவ ஒன்றியத்தால் இதழாக வலம் வரும் விம்பம் எனும் சஞ்சிகையானது எமது பாடசாலையின் உயர்தர மாணவர்களின் சுய திறனை நிதர்சனமாக்கும் ஒரு இதழாகும் விம்பம் சஞ்சிகையானது 3ஆவது இதழாக விரிந்து இன்று எமது கைகளில் வாசனையை கமழச் செய்ததை இட்டு நாம் பேருவகை அடைகின்றோம்

உயர்தர மாணவர்கள் தம் உள்ளங்களில் மறைந்து கிடக்கும் திறன்களையும் ஆற்றல்களையும் வெளிக்கொணரும் நோக்குடன் கையெழுத்து சஞ்சிகையாக வலம் வருகிறது இச் சஞ்சிகை இனி வரும் காலங்களிலும் தொடர்ந்தும் விம்பமாக வெளியாக வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும் இவ் இதழ் தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என்று மன நிறைவோடு வாழ்த்தி நிற்கின்றேன்.

நன்றி

**ம. பவுஸ்தீனா**

தரம் - 13 Com

## *ஒன்றியத் தலைவரின் சிந்தனையிலிருந்து*



மடுக் கல்வி வலயத்தில் சிறந்து விளங்கும் பாடசாலைகளின் வரிசையில் றோ.க.த.ம.வி க்கு தனியிடம் உண்டு எமது பாடசாலையானது கல்வியிலும் அதனோடு இணைந்த இதர செயற்பாடுகளிலும் சாதனை புரிந்து வருகின்றது.

அந்த வகையில் எமது உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆற்றல்கள் இத்திறமைகள் வெளிக்காட்டும் களமாகவும் அவர்களது 13 வருட பாடசாலை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஏடாகவும் இவ் விம்பம் இதழ் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வருடாவருடம் வெளியிடப்படுகின்றது.

இவ் இதழ் உருவாக்கத்தில் உறுதுணையாக இருந்து எம்மோடு உழைத்த அதிபர், ஆசிரியர்கள், உயர்தர மாணவர்கள் மற்றும் அன்பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

அத்துடன் விம்பம் இதழானது எம் கால்தடத்தில் நடைபயிலும் எம் சகோதரர்களுக்கு வழிகாட்டியாய் அமைந்து எம் மாணவர்களின் இலக்கிய உருவாக்கத் திறன் மென்மேலும் செழிப்படைய மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.

**யோ. கிஷோத்**

12 Com

## பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



13 வருடங்கள் தம் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து சமூக வாழ்வுக்குள் நுழையவிருக்கும் இம் மாணவர்களின் பாடசாலை வாழ்க்கையின் ஒரு பதிவேடாகவே இம் மலர் ஒவ்வொரு வருடமும் வெளிவருகின்றது.

பாடசாலைக் காலங்களில் இம் மாணவர்கள் பெற்றுக் கொண்ட பல்வேறு சிறந்த அனுபவங்களையும், வழிகாட்டல்களையும் தங்கள் வாழ்க்கையில் கடைப் பிடித்து நற்பிரஜைகளாக வாழவேண்டும் என வாழ்த்துவதோடு இம் மாணவர்களின் பரீட்சைப் பெறு பேறுகள் நல்ல முறையில் அமையப் பெற்று எதிர்காலம் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்

**திரு.சூ.அ. சில்வெஸ்ரர்**

உயர்தர மாணவர் ஒன்றியப் பொறுப்பாசிரியர்

# அதிபரின் வாழ்த்துச் செய்தி




2016ஆம் ஆண்டு உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படுகின்ற 'விம்பம்' என்னும் இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

புதுமைகளை புகுத்துவதற்கு பல்வேறு அமைப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் பாடசாலை எனும் நிறுவனம் பிரதான முகவராகச் செயற்பட்டு வருகின்றது இன்றைய மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படை தகைமைகளை வழங்கும் நிறுவனமாக மட்டுமன்றி அத்தகைமைகளை உறுதி செய்யும் நிறுவனமாகவும் பாடசாலை விளங்குகின்றது.

பாடசாலை கலாசாரம் ஆனது ஒவ்வொரு சிறுவனினதும் நடத்தைக் கோலங்களை சிறப்பான முறையில் நிர்ணயிக்கின்றது. அத்துடன் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய தகைமைகளையும் விருத்தியாக்குகின்றது. எனவே பாடசாலைச் சூழலில் இருந்து சமூகத்திற்குச் செல்லும் எமது பாடசாலையின்

உயர்தரப் பிரிவு மாணவர்கள் எதிர்காலச் சமுதாயத்தின் நல்ல தலைவர்களாக உருவாக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

நன்றி

அதிபர்
**Rev.Bro.ஜோசப் அகஸ்ரின்**
மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி

## பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையில் வருடா வருடம் க.பொ.த (உ/த) மாணவர்களால் வெளியிடப்படுகின்ற விம்பம் என்னும் சஞ்சிகை இவ் வருடமும் வெளியிடப்படுவதையிட்டு மகிழ்வடைகின்றேன் இவ் வெளியீடானது மாணவர்களின் கற்பனைத் திறன்கள் எழுத்தாற்றல்கள் என்பவற்றை வெளிக்கொணர்கின்ற ஒரு களமாக இவ் விம்பம் தெறிப்படைகின்றது. இன்னும் ஏனைய மாணவர்களின் எழுத்தாற்றல்களையும் தேடல்களையும் வளப்படுத்துகின்ற ஊக்கப்படுத்துகின்றதாகவும் இந்நூல் அமைந்து வருகின்றது. தொடர்ந்தும் க.பொ.த (உ/த) கல்வியை முடித்து வெளியேறுகின்ற மாணவர்களுக்கு வழிகாட்டலாகவும் ஏனைய மாணவர்களுக்கு தமது திறன்களை வெளிப்படுத்தும் ஒரு தூண்டுகோலாகவும் அமைகின்றது. இதையிட்டு இந் நூலுக்கு வாழ்த்துக் கூறுவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

பிரதி அதிபர்
**திருமதி.S.ராஜசேகரன்**
மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி

## பங்குத் தந்தையின் ஆசியுரை



"எல்லாப் புகழும் இறைவனுக்கே"

மன்/கருங்கண்டல் றோ.க.த.மகா வித்தியாலயத்தில் ஆண்டு தோறும் உயர்தர மாணவர்களால் வெளியிடப்படும் விம்பம் என்னும் சஞ்சிகையானது இவ்வாண்டும் வெளிவருவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கருவூலத்தில் உள்ள கருத்துக்களுக்கு எழுத்துருவம் கொடுத்து சஞ்சிகையாகவோ, நூலாகவோ வெளியிடுவது சமுதாயத்தை விழிப்படையச் செய்வதற்கு சிறந்த வாய்ப்பாகும். அந்த விதத்தில் கல்விச் சமுகத்தின் கண்கள் அகல விரிய வைக்க கூடிய விதத்தில் ஆழமாகச் சிந்தித்து செயற்படக் கூடிய விதத்தில் மாணவர்களின் ஆக்கங்கள் அமைந்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

எனவே இச் சஞ்சிகையின் படைப்பாளிகள், நெறிப்படுத்துநர்கள், வழிகாட்டிகள் அனைவரையும் இறைவன் நிறைவாக ஆசிர்வதிக்க வேண்டுகிறேன்.

"மனிதருக்காக அன்றிக் கடவுளுக்காக அனைத்தையும் நல் மனதோடு செய்யுங்கள்" (எபேசியர் 6:7) என்ற பவுலடிகளாரின் வார்த்தைக்கு அமைவாக அனைத்தையும் இதய சுத்தத்தோடு செய்யுங்கள் அப்போது வாழ்வில் அதிக சாதனைகளைப் படைப்பீர்கள் இந்த நம்பிக்கை எல்லோரிலும் இருப்பதாக!

**அருட்பணி செ. வசந்தகுமார்**
பங்குத்தந்தை
காத்தான்குளம்.

## குருக்களின் ஆசியுரை



மருத நிலமதில் மங்காத மாணிக்கமாய் மாதோட்டப் பகுதியிலே அறிவொளியை ஊட்டுகின்ற மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி இன் 2016 ஆம் ஆண்டிற்கான புத்தக வெளியீட்டு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

“இலட்சியத்தை நோக்கி கனவு காணுங்கள் உறக்கத்தில் வருவது இல்லை கனவு உன்னை உறங்க விடாமல் செய்வதுதான் கனவு”

பல கனவுகள், திறமைகளுடன் இந்தப் பாடசாலைச் சமூகத்தில் பலர் கல்வி கற்கின்றனர். அவர்களை உருவாக்குவதில் அதிபர் ஆசிரியர்கள் கடுமையாக உழைக்கின்றனர். வருடாந்தம் இடம்பெறும் புத்தக வெளியீடுகள் இன்னும் பல விடயங்களைத் தாங்கி வெளிவந்து மாணவர்களின் ஆளுமை விருத்தி கொண்ட நற்பிரஜைகளாக திகழ வேண்டுமென நான் பிரார்த்தித்து இப் பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறி மலர் வெளியீடானது சிறப்புப் பெற ஆசித்து நிற்கின்றேன்.

நன்றி.

**குருக்கள் திசாகரசர்மா**
சாளம்பைக்குளம்
வட்டக்கண்டல்
மன்னார்.

## *பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி*



மன்னார் மாவட்டத்தின் மடு கல்வி வலயத்தில் இயங்கிவரும் மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி ஆனது பல்வேறு தடைகளைத் தாண்டி கல்வி, விளையாட்டு, பண்பாட்டு நிகழ்வுகளில் முன்னேறிவருவது கண்கூடு. இந்த முன்னேற்றப் பாதைக்கு வலுச்சேர்க்கும் ஓர் அம்சமாக உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வருடா வருடம் வெளியிடப்படும் “விம்பம்” இதழ் வெளிவருவதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் இதழிலே மாணவர்கள் தமது சிந்தனைகளையும் பள்ளி வாழ்க்கையின் பசுமையான நினைவுகளையும் சிறந்த ஆக்கங்களாகச் சிறகடித்துப் பறக்கச் செய்துள்ளார்கள். இவ் அரிய முயற்சியானது இவர்களுக்குப் பின்வரும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைவதோடு பாடசாலையின் வளர்ச்சியினை மென்மேலும் ஒருபடி உயர்த்தி உள்ளது.

விம்பத்தின் உருவாக்கத்திற்கு உழைத்த மாணவர்கள், வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் உளமாரப் பாராட்டி எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

**நல்லதை எண்ணி,**
**நல்லதை செய்து,**
**நாடு போற்ற வாழ,**
**வாழ்த்ததுக்கள்!**

**சிவசக்தி ஆனந்தன்**
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி மாவட்டம்.

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும் முகமாக நீங்கள் காணும் ஒருமுக பிரிவுபசாரத்திற்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையர்கள் என்ற அடையாளத்தின் பங்காளர்களாகிய திறமையான பிரஜைகள் மூலம் சர்வதேச சமூகத்தின் சிறப்பை நோக்கிப் பயணிக்கின்ற இலங்கையில் கட்டாயக் கல்விக்கான வயதெல்லை 14 ஆக காணப்பட்டது. அது பின்னர் அரச கருமக் கொள்கையின் தீர்மானித்தபடி பாடசாலை செல்லும் வயதெல்லை 2 வருடமாக அதிகரிக்கப்பட்டு 16 வயதாக மாற்றப்பட்டது. இதன் அடிப்படையில் 9 ஆம் தரத்தில் இடைவிலகல் தவிர்க்கப்பட்டதுடன் க.பொ.த (சா.த) வரை கட்டாயக் கல்வி பயில்வது உறுதிபடுத்தப்பட்டது. இந்நிலை இன்னும் மாற்றப்படக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்ற போதிலும் பாடசாலைக் கல்வியை முடிக்கின்ற பிள்ளைகளில் அதிகமானவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் தேசிய மொழிப்பயிற்சி தகைமைச்சான்றிதழ் (NVQ) வழங்குவதற்கான பாதையை திறந்துவிடுவது தற்போது அவசியமாகின்றது.

எதிர்கால வேலை உலகில் பிரவேசிக்கும் பிள்ளைகளை பூரணத்துவம் மிக்கவர்களாக ஆக்குவதே இதன் நோக்கமாகவும் உள்ளது. இந்த வகையில் கல்வியின் உள்ளகத்தைப் போலவே வெளியாக வினைத்திறனையும் பாதுகாப்பதற்கு எம் ஒவ்வொருவருக்கும் பொறுப்புண்டு.

இந்த வகையில் 13 வருட கல்வி முறையில் நின்று விடுபடுகின்ற நீங்கள் உலகில் தனி மனிதர்களாக இனி நடமாட ஆரம்பிக்கப் போகின்றீர்கள். "தனி ஆள்" வேறுபாடு என்பது உங்கள் ஒவ்வொருவருக்கும் பிரபல்யமாகப் போகின்றது.

எனவே நல்லதை செய்யவும்,
நல்லதை தெரிவிக்கவும்,
நல்லதை சிந்திக்கவும் இனி முயற்சியுங்கள்.
உங்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

அன்புடன்

**திரு T.ஜோன் குயின்ரஸ்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
மடு வலயம்.

# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி



மடு வலயத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாகாணமட்டத்தில் பல சாதனைகளைப் புரிந்த மன்/கருங்கண்டல் றோ.க.த மகா வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையை எழுதவிருக்கின்ற மாணவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இப் பாடசாலை 5 ஆம் தரப்பிரிவில் புலமைப் பரீட்சையில் சாதனை படைத்துள்ளது. அது போன்று க.பொ.த சா/த பரீட்சையிலும் சாதனை படைத்துள்ளது.

இவ் வருடத்தில் உயர்தரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மடு வலயத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென இறையாசீர் வேண்டி நிற்கின்றேன். இவ் வருடம் பரீட்சை எழுதுகின்ற ஒவ்வொரு மாணவ மாணவியையும் சிறந்த பெறுபேற்றைப் பெற்று நல்ல எதிர்காலத்தை கண்டடைய உள்ளத்தின் ஆழத்திலுள்ள உண்மையான அன்போடும், பாசத்தோடும், இறை விசுவாசத்தோடும் வாழ்த்தி ஆசி கூறி நிற்கின்றேன்.

ஆயுதத்தினாலும், அடாவடித்தனத்தினாலும், பணச் செருக்கினாலும அதிகாரத்தினாலும், பெற்றுக் கொள்கின்ற எவையும் சாதனைகள் அல்ல மாறாக எமது எண்ணங்களினாலும், எமது ஆற்றல்களினாலும், எமது பேனாக்களினாலும் அடையப்படுபவையே உண்மையான சாதனைகள் எனக்கூறி சக்தியாகிய இறைவனின் தூண்டுதலினால் சாதனைகள் பல புரிந்து சிறந்து வாழ்ந்திட வாழ்த்துகின்றேன்.

நன்றி

**அருட்.சகோ.S.C.விஜயதாசன்**
மன்/நானாட்டான் ம.வி

## வெளியீட்டுக் குழு

**ஆலோசனை**

Rev.Bro.ஜோசப் அகஸ்ரின்
(அதிபர்)

**பொறுப்பாசிரியர்**

திரு. S.A. சில்வெஸ்ரர்

**இதழாசிரியர்**

செல்வி. ம.பவுஸ்தினா

**மலர் வெளியீட்டுக்குழு**

திரு.J.T. சிம்சன்

திரு.S.A. சில்வெஸ்ரர்

## உயர்தர மாணவர் ஒன்றியம்

**காப்பாளர்**

Rev.Bro.ஜோசப் அகஸ்ரின் (அதிபர்)

**தலைவர்**

செல்வன். யோ. கிஷோத்

**செயலாளர்**

செல்வி. ஜே. ஜெனோ நிருசிகா

**பொருளாளர்**

செல்வன். கு.டிலைக்ஷன்

**பொறுப்பாசிரியர்**

திரு. S.A. சில்வெஸ்ரர்

## தூரநோக்கு

தேசிய கல்விக் கொள்கைகளுக்கு ஏற்ப மாறிவரும் உலகில் ஆளுமையும் அறிவும் பண்பும் கொண்ட சமூகமொன்றை உருவாக்கும் வகையில் மாணவர்களின் தேர்ச்சியை வளர்த்து சமூகத்திற்கு அவர்களைக் கையளித்தல்.

## பணிக்கூற்று

மாறிவரும் உலகிற்கேற்ப பண்புடனும் தொழில்நுட்ப அறிவுடனும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் உடையோரை உருவாக்கல்.

## மகுட வாசகம்

கல்வியதே கண்ணாகும்

## அதிபர்

எம் கல்லூரியின்
முதல்வரே அகஸ்ரின்
எம் உயர்விற்காய் வந்தீரே
எம் கல்லூரிக்கு
பக்தியோடு பண்பையும்
கல்வியோடு கலையையும்
அள்ளி வழங்கி
அன்னையாய் தந்தையாய்
நல்ல அதிபராய் வழிப்படுத்தும்
உம் பணி தொடர
வாழ்த்துகின்றோம்.

## திருமதி. S.ராஜசேகரன்

அன்பான பேச்சு, பாசமான புன்னகை
மாணவர்களின் கடமை, கண்ணியம்,
ஒழுக்கத்திற்காய்
ஓய்வின்றி உழைத்து,
அலுவலகப் பணிதனை பணிவுடனே ஆற்றி
அன்னையாய் ஆசானாய் உலா வந்திடுவீரே!
எங்கள் பிரதி அதிபர் மாலா
வாழ்க வளமுடன்

## அருட்.சகோ.யேசுநேசன் டயஸ்

துணிச்சலின் சிகரமாய்
துன்பத்தின் சவாலாய்
தூங்காத உழைப்புடன்
துடிப்புடனே தலைமைத்துவத்தினையும்
துல்லியமாய் தம் பணியில்
காட்டிடுவார் இவர்தான் எம் அருட்சகோதரர்
வாழ்க வளமுடன்

## திரு.S.சில்வெஸ்ரர்

இளம் தலைமுறையின் இமயம் நீர்
கருங்கண்டல் உருவாக்கிய
புவியியல் பேராறு நீர்.
புவியியல் மட்டுமன்றி வாழ்வியலையும் கற்றுத்தரும்
கண்டிப்பும் கரிசனையும் கொண்ட
எம் ஆசான் சில்வெஸ்ரர் வாழ்க வளமுடன்

## திரு.S.கணேஸ்வரன்

வெள்ளிக்கிழமை வந்தவுடன்
பட்டாம் பூச்சியாய் பறந்திடுவார்
சமயம், சிங்களம், தமிழ் போன்ற பாடங்களை
கற்பிப்பதில் வித்தகராய் திகழ்ந்திடுவார்
பாடசாலை வேலைதனை கடமையுடன்
செய்திடும் எம் ஆசான்
கணேஸ்வரன் வாழ்க வளமுடன்.

## திருமதி. S.மேரி அன்சலா

பேச்சிலே கடுமையுடன் இனிமை சேர்த்து
கணக்கீட்டு பாடமதை கற்பிக்கும்
காத்தான் குளத்தின் முத்தே எம் ஆசான் அன்சலா
வாழ்க வளமுடன்

## Rev.Bro.கஜநப்பர் குருஸ்

பகுதித் தலைவராய் கடமைதனை
கண்ணியமாய் செய்திடுவார்
ஆங்கிலத்தோடு Advice உம் பண்ணும்
எம் ஆசான் வாழ்க வளமுடன்

## திருமதி. A.M.C.லெம்பேட்

திட்டமிடலும் தலைமைத்துவமும் ஏற்று
கடமைகளைச் சரிவரச் செய்திடுவார்
வணிகப் பாடமதை புலமையுடன் கற்பிக்கும்
எம் ஆசான் ராதிகாவே
வாழ்த்துகின்றோம் மாணவர் நாம்

## திருமதி. J.விஜயகலா

கரை காணா நாகரிகமாம்
இந்து நாகரிகமதை கருத்துடன்
எமக்குப் புகட்டி அதில் நாமும்
கரை கண்டிட அயராது உழைத்திடும்
எம் ஆசான் விஜயகலா
வாழ்க வளமுடன்

## திருமதி. D.அருள் ஜெயந்தன்

தன்மையான பேச்சோடு பதுமையான நடையுடன்
தகவல் தொழில் நுட்பத்தில் புரட்சி காணத்துடிக்கும்
நாயகியே எம் ஆசான் டெனோ
வாழ்க வளமுடன்

## திருமதி. P.புஸ்பகுமாரி

கருங்கண்டல் மண்ணிலும்
பல மாதவிகளையும் உ ஸேக்களையும்
உ ருவாக்குவேன் என்று
உ யிலங்குளம் இருந்து வந்த நாயகியே
நடனத்தில் மாணவர்களை பிரியமூட்டி
சாதனை படைக்க வைத்த நாட்டிய தாரகையே புஸ்பா
வாழ்க வளமுடன்

## செல்வி. M.A.துஸ்யந்தி

வண்ண சேலை கட்டி- எம் கல்லூரிக்கு பொலிவைக்
கொடுத்து தமிழ் மீதும் நாடகக் கலை மீதும்
நீங்காது பற்றுக் கொண்டு
இரண்டு கைகளாக இரு கலைகளையும்
நினைத்து மாணவர்களை உயர்த்த
ஏணிப் படியாய் விளங்கும்
எம் நாடகக் குருவே துஸ்யந்தி
வாழ்க வளமுடன்

## செல்வி. M.றொகானி

பொருளியல் பாடமதில் கரை கண்டு
பற்பல கலைகளில் சிறப்புற்று
பல கருத்துக்களை எமக்கு ஊட்டும்
எம் ஆசான் றொகானி வாழ்த்துகின்றோம்
மாணவர் நாம்

## திருமதி. J.C.றொபினா கிறிசாந்தி

பழந்தமிழ் மரபில் மூழ்கி
நவீன தமிழ் இலக்கியத்தில்
முத்தெடுத்த அரசி நீர் !
கம்பனையும் வள்ளுவனையும்
அடிவேர் வரை ஆய்ந்தறிந்தவர் நீர்!
அவரே எங்கள் றொபினா - உம்
பணி தொடர வாழ்த்துகின்றோம்
மாணவர் நாம்

### திரு. S.பகிர்தராஜ்

கிழமையில் இரு நாட்கள்
எம் பள்ளியில் பாதம் பதித்து
விசைப் பலகையிலே விந்தை செய்யும்
எம் ஆசான் வாழ்க வளமுடன்

### செல்வி. P.தர்சினி

அமைதியின் சின்னமாய்
அழகின் சிற்பமாய்
அறிவின் சிகரமாய்- வந்து
குறுகிய காலம் பழகி
கூடிய பலனைத் தந்த
எங்கள் ஆசான் தர்சினி
வாழ்த்துகின்றோம்
மாணவர் நாம்

### செல்வி. S. தனுஜா

கிறிஸ்தவநாகரிக பாடமதை
பக்தியுடன் - எம்மைப் பயில வைத்து
சமயப் பற்றை எம்மில் பற்ற வைத்து
சிரிப்போடும் சில்லறைப் பேச்சோடும்
எம் கல்லூரியின் சிட்டுக் குருவியாய்
வலம் வரும் நாயகியே- தனுஜா
உம் தெய்வீகப் பணி தொடர வாழ்த்துகின்றோம்
மாணவர் நாம்

## Rev.Bro. S.C. விஜயதாசன்

பாடசாலையின் முதல்வராய்
எமக்கெல்லாம் தலைவராய்
ஒழுக்கத்தில் எமை வளர்த்து
பல் துறையில் தேசிய சாதனை நாம் படைக்க
அரும் பணி ஆற்றினீரே
மாற்றம் என்ற பெயரிலே எம்மை ஆறாது கலங்க வைத்த எம்
முன்னாள் அதிபர் விஜயா உம் பணி என்றும் உயர
வாழ்த்துகின்றோம்

மழலைகளோடு தானும் மழலையாய் மாறி
கற்பிக்கும் அன்னையே எம் ஆசான் **லதா**...

கோபம் என்றால் என்ன என்று கேட்கும்
கருணையின் வடிவே **வனஜா**...

எம் கல்லூரியில் வரலாற்று சுவடுகளை
பொறித்திடும எம் ஆசான் **தொம்மை**...

அறிவோடு பண்பையும் சிறு வயதிலிருந்தே ஊட்டிட
உழைக்கும் எம் ஆசானே **நெல்சன்**.....
சாந்தியின் உருவமாய் பல விஞ்ஞானிகளை
உருவாக்க முயலும் எம் ஆசான் **சாந்தி**...

அருமையான பேச்சினால் எமை ஈர்த்து இலட்சியத்தில்
பயணிக்கும் ஆசானே **சர்மிளா**......

விஞ்ஞானப் பாடமதை வியப்புடனே எமக்கூட்டும்
எம் ஆசான் **யுஸ்ரேசியா**

கணிதமதை கனிவுடன் எமக்கூட்டும் **தவராசா**

இனிமையான கலையாம் இசைக்கலையை இன்முகத்துடன்
கற்பிக்கும் எம் ஆசான் **ஜனனி**
அன்புடனே கத்தோலிக்கப் பாடமதை அலுப்பின்றிக்
கற்பிக்கும் எம் ஆசான் **தாரணி**

விவசயக் கல்வியை வினயமாய் எமக்கூட்டி வளர்த்திடும்
எம் ஆசான் **எட்வின்**

சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பித்து விளையாட்டில்
விசித்திரமாய் சாதனை படைத்திட உழைக்கும் எம்
ஆசான் **வசிதரன்**
வாழ்கைக்குத் தேவையான செயன்முறையோடு
நூலகத்தினூடே வாசிப்பறிவையும் எம்
மாணவர்களுக்கூட்டும் **தயானந்தி**

சித்திரத்தோடு சிற்பக்கலையையும் பயின்று
அக்கலையை மாணவர்களுக்குப் புகட்டிடும்
எம் ஆசான் **சிம்சன்**

**அதிபர், ஆசிரியர்கள் குழாம் - 2016**



## கு.டிலக்ஷன்

சின்னவலயங்கட்டு
இரணைஇலுப்பைக்குளம்
**T.P- 0773829756**



பாடசாலையின் புதல்வன்
மாணவர்களின் தலைவன்
பாரினில் கலைஞன்
கதிரவனின் கண்ணன்
எமக்கெல்லாம் தமையன்
அவர்தான் எங்கள் டிலக்ஷன்

## கி.அந்தோனி

பாலையடிப்புதுக்குளம்
வட்டக்கண்டல்
**T.P-0775659266**



சங்கங்கள் அமைத்து
மங்கையை காத்திடுவான்
ஜோசப் பெஸ்கியை
வீரமா முனியாக்கிடுவான்
அவன்தான் எங்கள் விண்ணன்
கலையின் கண்ணன் அந்தோனி

## மெ.ஜோசப் குருஸ்

**சிறுக்குளம்**
**பறப்பாங்கண்டல்**

**T.P- 0772176041**



முகத்திலே அன்பை கனிந்திடுவான்
அகத்திலே பாசத்தை பொழிந்திடுவான்
நடத்தையில் என்றும் பணிந்திடுவான்
விளையாட்டில் வீரனாய் துணிந்திடுவான்
அமைச்சராய் பாடசாலையில்
திகழ்ந்திடுவான்
அவனே எங்கள் ஜோசப் குருஸ்

## செ.மில்ரன் துஷித்

**கருங்கண்டல்**
**வண்ணாகுளம்**

**T.P- 0766026071**



இவனது பேச்சோ இனிக்கும் கரும்பு
அதனால் எல்லாருக்கும் இவன்மீது
விருப்பு அவன் நடையில்
தோற்றிடும் எறும்பு இவன்
வகுப்பிலோ சரியான குறும்பு
அவனே எங்கள் கருங்கண்டல்
அரும்பு மில்ரன் துசித்

## செ.ஜோசப் கோமகன்

**காத்தான்குளம்**
**வட்டக்கண்டல்**
**T.P- 0770807853**



தகவல் ஒன்றும் அறியாதவன் போல் இருந்து தகவல் தொடர்பாடல் பாடம் தனிலே உயர்தரச் சித்தி பெற்று வணிகத் துறையினை ஆர்வத்துடன் கற்றிடும் கறுக்காக் குளத்தின் மைந்தனே எங்கள் கோமகன்

## செ.மரிய றொடைக்சினி

**காத்தான்குளம்**
**வட்டக்கண்டல்**
**T.P-0774950639**



மெலிந்த உடலும் மென்மையான
உள்ளமும் முகத்தில் புன்முறுவலோடு
அகத்தினில் நல்லுறவு கொண்டு
வர்த்தகப் பிரிவினில் வலம்வரும்
மாணவத் தலைவியே எம் மனதில்
இடம் பிடித்த அழகியே றொடைக்சினி

## அ.எமரென்சியா

நெடுங்கண்டல்
அடம்பன்
T.P- 0766966770



அவள் வருவதோ றூட் பஸ்
அவள் கதையிலோ ஒரு லேற்றஸ்ட்
வகுப்பிலோ ஒரு நீற்னஸ்
அவளே எங்கள் news first எமி

## கி.நிரோசா

அடம்பன்தாழ்வு
வட்டக்கண்டல்
T.P- 0772617705



அவள் பெயரில் உள்ளது ஒரு
றோசா கதைப்பதோ ஒரு லேசா
கண்ணாடி மின்னும் லைற்றா
அன்பில் அன்னைத் தெரேசா
அவளே எங்கள் நிறோசா

## உ.சோபியா



**ஆலங்குளம்**
**வட்டக்கண்டல்**
**T.P- 0770326487**

கோபம் என்றாலோ ஒரு விரக்தி
கூந்தலோ றொம்ப அடர்த்தி அழகில்
அவள் ஒரு செம்பரத்தி
வர்த்தகத்தை அவள் விரும்பி எம்
மாணவரை பண்பில் நடத்திடுவாள்
அவளே எங்கள் சோபியா

## ப.நிறஞ்சினி தேவி



**கறுக்காக்குளம்**
**வட்டக்கண்டல்**
**T.P- 0773817105**

கண்களில் மின்னிடும் கனிவு
கடமை புரிவதில் ஆர்வம்
கட்டுப்பாடும் பிரமாணிக்கமும் உள்ள
கலைப்பிரிவின் தேவியே
எங்கள் நிறஞ்சினி தேவி

## செ.பிரசாந்தினி

கறுக்காக்குளம்
வட்டக்கண்டல்
T.P- 0779629051



பக்திக்கு முதலிடம் இவள்
பள்ளி வருவதிலும் முதலிடம் இவள்
இரகசியம் என்ற சொல் இவளுக்குத் தெரியாது
அவளுக்குத் தெரியாமல் எதையும் பேசவும் முடியாது
அவள்தான் எங்கள் அன்புப் பிரசாந்தினி

## ச.ஜெரன்சியா

காத்தான்குளம்
வட்டக்கண்டல்
T.P- 0774329883



வானில் நிலவும் அவள்
பூவின் புதல்வி அவள்
நக்கீரர் நாவில் நின்ற தமிழ் அவள்
கணியன் பூங்குன்றனால் கனிந்த கனி அவள்
அவள்தான் எங்கள் சமாதானப் புறா
அன்பின் ஜெறா

## இ.சிந்துஜா



**பெரியகுளம்**
**பறப்பாங்கண்டல்**
**T.P- 0776684305**

ஆசான்களை மதித்து
பாசாங்குகள் செய்து
பாடம் பயில்வதில் பற்றுக் கொண்டு
பண்புடன் வாழக் கற்றுக்
கொண்டவள்
அவள்தான் எங்கள் சிந்துஜா

## ம.பவுஸ்தீனா



**காத்தான் குளம்**
**வட்டக்கண்டல்**
**T.P- 0776415105**

பணிவாகப் பள்ளிக்குள் புகுந்து
பண்பான தோழருடன் பழகி
கனிவான மொழிகளைப் பேசி
காரியங்கள் பலதையும் சாதித்திடும்
எங்கள் பவுஸ்ரினா

## ஜெ. பவித்திரா

இத்திக்கண்டல்
அடம்பன்
**T.P- 0772193772**



மனதிற்கு அன்புச்சரம் - முகத்தில்
மகிழ்ச்சி அழியாச்சரம் - அவள்
படிப்போ தித்திக்கும் சரம் -
அவளது பண்போ தெவிட்டாச்சரம்
அவள்தான் எங்கள் வில்லி
வடிவின் வள்ளி பவித்திரா

## ஜே.கெளற்கிவானி

காத்தான் குளம்
வட்டக்கண்டல்
**T.P- 0771714766**



நிகரற்ற அன்பின் முகவரி
கரையற்ற அறிவின் முதல்வரி
பேசும் மொழியோ இனிய கவிவரி
கல்வியில் சிறந்திடும் காவேரி
அவள்தான் எங்கள் மின்னல் கெனா

## யே.ஜெனோ நிருசிக்கா

காத்தான்குளம்
வட்டக்கண்டல்
மன்னார்
**T.P- 0775570200**



அவளது பார்வையோ பரவசம்
பரதமோ அவளது நவரசம்
இவள் படிப்பில் காட்டுவாள் உற்சாகம்
அவள் நடையோ தனி ரகம்
அவளே எங்கள் நாட்டியத் தாரகை
நிருசிக்கா

## ம.பிரியாந்தினி

காத்தான் குளம்
வட்டக்கண்டல்
**T.P- 0766026104**



அமைதிக்கு அர்த்தம் இவள்
புன்னகைக்கு புஸ்பம் இவள்
தனிமைக்கு இனிமை அவள்
வார்த்தைக்கு வன்மை அவள்
அவள்தான் எங்கள் பிரியாந்தினி

## உயர்தர கலைப்பிரிவு மாணவர்கள் - 2018



## உயர்தர கலைப்பிரிவு மாணவர்கள் - 2017



## உயர்தர வர்த்தகப்பிரிவு மாணவர்கள் - 2017



## அம்மா



அம்மா என்றால் அன்பு
அப்பா என்றால் அறிவு
ஆசான் என்றால் கல்வி
அதுவே உலகின் தெய்வம்
அன்னையை பிள்ளை
பிள்ளையை அன்னை
அம்மா என்றே அழைக்கின்றது
அன்பின் வடிவம் பண்பின் உருவம்
அம்மா என்ற சொல்லில் உண்டு

**ஜெ.ஜெனோறிருசிக்கா – 13 Arts**

## பிரிவு

ஒரு கூட்டின் பறவைகள் போல்
சிறகடித்துப் பறந்து திரிந்தோம்
நாட்கள் அனைத்தும் பறந்தோடி
தேர்வு நாளை நினைவில் வைத்து
எம் பள்ளி வாழ்க்கையும் இன்னும்
ஓரிருநாட்கள் முற்றுப் புள்ளி
ஆகிவிடும் இவ்வேளையில்
கண்ணீரால் காவியம் எழுதும்
என் இனிய நட்புக் கல்லறை
மட்டும் தொடருமன்றோ



**ச.ஜெரன்சியா – 13 Arts**

## செம்மொழியாம் தமிழ் மொழி

அம்மா மூன்றெழுத்து
அப்பா மூன்றெழுத்து
அண்ணா மூன்றெழுத்து
தம்பி மூன்றெழுத்து
இவை அனைத்தும்
அடங்கிய உறவு மூன்றெழுத்து
உறவில் மேம்படும் பாசம் மூன்றெழுத்து
பாசத்தினால் விளையும் அன்பு மூன்றெழுத்து
வெற்றி மூன்றெழுத்து
தோல்வி மூன்றெழுத்து
தோல்வியால் வரும் வேதனை மூன்றெழுத்து
இது நான் எழுதிய கவிதை என்றால் அதுவும்
மூன்றெழுத்து
நட்பு என்ற மூன்றெழுத்தில்

இணைந்து படித்த அனைவருக்கும் நன்றி என்பது
மூன்றெழுத்து இவை அனைத்தும் அடங்கிய தமிழ்
மூன்றெழுத்து
வாழ்க தமிழ்

**மெ.ஜோசப் குருஸ் - 13 Arts**

## மீண்டும் பள்ளியில் நான்

மரத்தடியில் மாணவர்கள் தன்னில்
படித்த பாடங்களில் கதைகள்
பங்கு கொண்ட நிகழ்வுகள்
மரத்தின் மேல் பறவைகளின் கூச்சல்
பனி விழுகின்ற புல்லின் மேல்
கம்பளப் பூச்சிகளின் மேய்ச்சல்

ஆங்காங்கே அரட்டை அடிக்கும்
மாணவ சகாக்கள்
கலைந்து கிடக்கும் விம்பங்களின் நினைவலைகள்
பூக்களினால் செப்பனிடப்பட்ட
பள்ளியறை ஓவியங்கள் கிறுக்கல்கள்

செல்லா காசு கொடுத்து
வாங்கி உண்ட வடைகள்
பரீட்சையில் பார்த்தடித்த பதிவுகள்
தங்கியிருந்த நினைவுகள்
புன்னகை முகத்துடன் உலவிய ஆசான்கள்
ஒழுக்க விதித்தன்மை முறையை கற்றுத் தந்த அதிபர்
கட்டடித்த பாடசாலை நாட்கள்
வீண் குழப்படிகளில் வாங்கிய பிரம்பு அடிகள் பேச்சுக்கள்

தனிமையான அன்பு நினைவுகள்
தா என்றாலும் ஒருமனதாய் கொடுக்க முடியாத
விலை கொடுத்து வாங்க முடியாத
நட்பின் உரசல்கள்

கோபித்த வார்த்தைகள் - நான்
கோபித்த ஆசிரிய உள்ளங்கள்
நல் வழி காட்டிய முன்னோர்கள்

என்றவாறு தொடர்ந்து
நெஞ்சில் சேமித்த
பசுமை நினைவுகளை
மீட்டிப் பார்க்கும் பொழுது
உள்ளம் அழும்
அந்தக் காலம் தன்னை மறுபடியும் கேட்டதே

நிறைவேறுமா என்ற ஆசை...

**ம. பிரியாந்தினி - 13 Arts**

## வியர்வையில் பெற்ற உயர்வு

காடாய் கிடந்த நிலத்தை
காணியாக்கி - அவர்
கன்றுகளாய் நட்டவை
கனிதரும் மரங்களாய் இன்று

குடிசையில் இருந்து உழைத்து-எம்மை
மாடியில் உயர்த்தி வைத்தார்
நோய் நொடிவந்த போது
தன் மனம் துடித்து நொந்தார்

வாயைக் கட்டி வாழ்ந்து
வசதிகள் செய்து தந்தார்- எம்
தேவைகளைத் தீர்ப்பதற்காய்-உடல்
நோயை எல்லாம் மறந்து உழைத்தார்

வியர்வையில் தினம் நனைந்து
உயர் கல்வியைப் பெற்றுத் தந்தார்
துயரம் எம்மை அணுகா வண்ணம்
தூக்கமின்றி காத்து வந்தார்

இளமையில் எம்மை
கண்ணின் இமை போல் காத்தவர்களை
முதுமையில் மனம் நோகாமல்
பார்ப்பது நம் கடமை

**உ. சோபியா – 13 Com**

## சிந்தனைத் துளிகள்

கடவுளுக்குப் பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட மக்களுக்கு உதவி செய்யும் கைகளே மேலானது

வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம் தான் கடமையைச் செய்தால் வெற்றி கடமைக்குச் செய்தால் தோல்வி

உன் எண்ணம் விண்ணைத் தொட வேண்டும்- என்றால் உன் வியர்வை மண்ணை தொட வேண்டும்

தன்னிடம் போதிய அறிவு இல்லாதவனே கடுமையான வார்த்தைகளை பிறர் மீது கொட்டுவான் அது அவனுடைய பலவீனத்தின் அடையாளம்

தன்னம்பிக்கைக்கும் தலைக்கனத்திற்கும் நூல் அளவுதான் வித்தியாசம் நமக்கு இருந்தால் நம்பிக்கை அடுத்தவனுக்கு இருந்தால் தலைக்கனம்

நான் கூறிய முதல் பொய் ஏனையோருக்கு தெரிய வரும்போது நான் கூறிய உண்மைகள் கூட சந்தேகத்திற்கு இடமாகி விடலாம்

அவசியமானவர்களிடம் உண்மையை ஒரு போதும் மறைக்காதே அவசியமற்றவர்களிடம் உண்மையை மறந்தும் கூட சொல்லி விடாதே
இரண்டும் உன் உள்ளத்தை காயப்படுத்தி விடும்

**செ. மரிய றொடைக்சினி - 13 Com**

## பள்ளிப் பருவம்

சிட்டான எம் சிறு பட்டாம் பூச்சிகளாய்
சிறகடித்துப் பறக்கிறதே சாலை எம் சோலையிலே சீருடை
போலவே எம் சிந்தையும் தூய்மையாய்
கூடி நாம் ஒன்றாக குதூகலிக்கும் பருவமிது

காலையில் எழுந்ததுமே கண்ணில் சக நண்பர்கள்தான்
அன்பெனும் பாடமதை ஆழமாய்க் கற்றிடவே
அனுபவக் கல்வி தரும் ஆசியர் பெருந்தகைகள்
பாசமாக கதை பேசும் அன்னையரும் இவரன்றோ

இனமத பிரிவின்றி பிறப்பு பின்னணி தனை மறந்து
இணைந்திருப்போம் பள்ளியிலே இங்கு நாம் மாணவராய்
பகிர்ந்துண்ணும் உணவுகளில் பாசமது வளர்ந்திடுமே
தேவை அறிந்து உதவிடவே உறவு வலுப் பெற்றிடுமே
உணர்வில் ஒன்றாய் உறவில் ஒன்றாய் - இங்கு நாம்
ஒரு தாய்ப் பிள்ளைகளாய் உரிமையுடன் பழகும் இனிய பருவமிது

நெஞ்சு நிறை சோகங்களும் பஞ்சாகி பறந்திடுமே
சாலை தந்த நினைவுகளோ கனவெங்கும் தித்திக்குமே

கலையோடும் விஞ்ஞானம் விளையாட்டு இதிலெல்லாம்-நாம்
சாதிக்கத் துடிக்கும் இன்பத் துடிப்பான பருவமிது
சாதிவெறி இல்லாத சந்தோச நகரம் இது
சப்பாத்துக்கும் அஞ்சாத துணிச்சலான பருவம் இது

**கி.நிரோஷா – 13 Com**

## விடை பெறும் நேரத்தில் ஒரு சில நினைவுகள்

எனது பள்ளி நினைவுகள்- என்றும்
கலைந்து போகாத கனவுகள்- முதல்
பள்ளியில் கால் வைக்கும் போது கண்ணில்
தாரை தாரையாய் கண்ணீர் விட்டேன்
இன்று அதே கண்ணீரை பள்ளி விட்டு
செல்லும் போது விடுகின்றேன்



என்னுடன் என்றும் கைகொடுக்கும்
தோழிகள் நான் அழுதால் என்ன
என கேட்டே என்னை கூடுதலாக
அழ வைக்கும் பாசம் நிறைந்தவர்கள்-என்னை
எப்பொழுதும் எந்த வேலையும் செய்ய
விடாமல் என் வீட்டில் என்னைப் பார்ப்பதை
விட தம் கண்போல பார்த்திடுவார்கள்

என் வகுப்பில் தேடி எடுத்த நான்கு
முத்துக்கள் போல இருக்கும் எனது- தோழன்மார்கள்
நான் கோபத்தில் என்ன
பேசினாலும் சிரித்துக் கொண்டே கேட்டு

சின்னச் சண்டை போட்டு அடுத்த நாளே - அதை
மறந்து கதைத்திடுவார்கள்

புவியியல் பாடமதை அமைதியாகக் கற்றிடுவோம்
தமிழ் பாடமதை சிரித்தே போக்கிடுவோம்
சமயப் பாடமதை கதைத்தே போக்கிடுவோம்
மிச்ச நேரத்தில் நூலகத்தில் தயானந்தி
ஆசிரியரிடம் உலக நடப்பைப் பற்றி கதைத்திடுவோம்
நேரம் போவது கூடத் தெரியாமல் அரட்டை அடித்திடுவோம்
குழுச் செயற்பாட்டிற்கு வந்து - நாம்
கூட்டாஞ்சோறு சமைத்து வாழை இலையில்
உண்டது என்றும் மறக்க முடியாது
சுற்றுலா சென்றால் ஜோர்ச் ஆசிரியரிடம்
பணம் வேண்டி உணவு உண்டிடுவோம்

பரீட்சை முடிந்து பெற்றோர் கூட்டம் வைத்தவுடன்
இவ்வாறு படிப்போம் என்று Time table போட்டிடுவோம்
பின் அதை இரண்டு நாளில் மறந்திடுவோம்
சுற்றுலா செல்ல பலமுறை அனைவரும்
திட்டமிட்டு அரட்டை அடிப்போம்
எங்கேயோ பிறந்த நாம்- அனைவரும்
இங்குதான் ஒன்றாய் ஆனோம்

மறக்க முடியாத நினைவுகளைத் தந்த
எமது பள்ளித்தாயையும் அன்பாக
எங்களுக்கு அறிவுரை கூறும் ஆசிரியர்களையும்
நாங்கள் பேசும் போது அதை மறந்து வேலை செய்யும்
எமது பள்ளி மாணவர்களுக்கும் Bye சொல்லி
விடை பெறுகின்றோம் நாம்

**ஜே.கெனற் கிவாணி - 13 Arts**

## உலகில் காணப்படும் நிறுவனங்களும் இடங்களும் ஆண்டுகளும்

| நிறுவனங்கள் | ஆண்டு | இடங்கள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் சுற்றுப் புற செயன் முறைத்திட்டம் | 1912 | நைரோபி |
| சர்வதேச தொழிலாளர் நிறுவனம் | 1919 | ஜெனிபா |
| உணவு சுகாதார ஸ்தாபனம் | 1945 | உரோம் |
| ஐக்கிய நாடுகள் சபை | 1945 | நியுயோர்க் |
| உலக வங்கி | 1945 | வாசிங்டன் |
| யுனிசெப் | 1946 | பரீஸ் |
| பன்நாட்டு தொலைத் தொடர்பு செயற்கை கோளமைப்பு | 1946 | நியுயோர்க் |
| உலக சுகாதார உயர் ஸ்தானிகராலயம் | 1948 | ஜெனிபா |
| உலக வானிலை அமைப்பு | 1950 | சுவிஸ்லாந்து |
| ஐரோப்பிய ஒன்றியம் | 1952 | பிறேசில்ஸ் |
| சர்வதேச அனுசக்தி நிறுவனம் | 1957 | வியட்நாம் |
| கடல் சார் செயற்பாடுகளுக்கான பன்நாட்டு அமைப்பு | 1958 | லண்டன் |
| ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் | 1959 | ஜெனிபா |
| ஒபேக் அமைப்பு | 1960 | வியட்நாம் |
| கிறீன் பீஸ் | 1971 | அம்ஸ்ராம் |
| சார்க் அமைப்பு | 1985 | காட்மண்டு |

**ம.பவுஸ்தீனா - 13 Com**

# பள்ளி

பள்ளிப் பருவத்தில் துள்ளித் திரிந்தோம்
பாலகராய் பாரினிலே நாம் உயர
முயன்றனரே எம் ஆசான்கள்
நட்பென்ற ஒற்றைச் சொல்லில்
நாம் எல்லாம் ஓர் உறவாய்
வலம் வந்தோம் வட்டக்கொட்டிலை




பற்பல குறும்புகளால்
பல அடிகள் வாங்கியதை
மறந்திடவே முடியாது
அடித்தாலும் குறைவதில்லை
எம் ஆசானின் பாசங்கள்
ஓர் குடும்பமாய் பகிர்ந்த நிலாக் கதை
இனி வருமா? எம் வாழ்வில்

பசிதனைப் போக்கிடவே
எமக்கிருந்த ஓர் கூட்டம் அது
நட்பால் இணைந்த நண்பர் கூட்டம்
பசித்துண்ணும் உறவுகளும்
கவலை மறந்து கலகலத்த வகுப்பறையும்
கிடைத்திடுமோ எம் வாழ்வில்

பிரிவொன்று வருகின்ற எமக்கு
அது புரிகின்றது நன்கு
செய்த குறும்புகளை மறக்கவும் முடியாது
அன்பும் பாசமும் என்றும் குறையாது
நல்ல நட்பை மட்டுமன்றி
அறிவு ஆற்றல் திறமை
அனைத்தும் தந்த எம் பள்ளிக்கு
புகழைக் கொடுத்து வாழ்ந்திடுவோம்
பள்ளிக்கு நல் மாணவனாய்

**கி.அந்தோனி - 13 Arts**

## தமிழ் மொழி

தடுக்கி விழுந்தால் மட்டும் அ...ஆ...
சிரிக்கும் போது மட்டும் இ...ஈ...
சூடு பட்டால் மட்டும் உ...ஊ...
அதட்டும் போது மட்டும் எ...ஏ...
ஐயத்தின் போது மட்டும் ஐ...
ஆச்சரியத்தின் போது மட்டும் ஒ...ஓ...
வக்கணையின் போது மட்டும் ஔ...
விக்கலின் போது மட்டும் ஃ
என்றும் தமிழ் பேசி மற்ற நேரம் வேற்று மொழி பேசும்
தமிழர்களிடம் மறக்காமல் சொல் உன் மொழி
தமிழ் மொழி என்று !!!

**செ. பிரசாந்தினி - 13 Arts**

## துன்பச் சுமை

சொற்ப நேரம்
வாழும்
பனித்துளியே
மலரின் பரிசத்தை
மகிழ்வுடன்
நுகரும் போது
பல்லாண்டு வாழும்
மனிதன்
இறுதி வரை
துன்பத்தையே
சுமக்கின்றான்

**ஜெ. பவித்திரா -13 Arts**

**நவின உலகத்திற்கு பாரதியாரை அழைத்து பாப்பா பாட்டு பாடுவோமா மாணவர்களே!**

**ok பாடுவோம்.....**

Online இல் விளையாடு பாப்பா – நீ
Offline இருத்தல் ஆகாது பாப்பா
Phone இல் விளையாடு பாப்பா – ஒரு
Tab ஐயும் விடாதே பாப்பா

காலை எழுந்தவுடன் Facebook – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல Status
மாலை முழுவதும் பல photos – என்று
பழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா

Like பண்ணி உசுப்பேத்து பாப்பா – நல்லா
Comment பண்ணி கடுப்பேத்து பாப்பா
Wifi நமக்கு துணை பாப்பா – வேறு
செலவு வர மாட்டாது பாப்பா

**ஜெ. பவித்திரா -13 Arts**

# The value of reading

"Reading makes the man prefect" so said philosopher Francis bacon. Reading not only improves your knowledge about He outside world, but also is a fun activity which can take you to a different world. Books bring the whole world to your finger tips, enabling you to travel the world from your armchair.

Education, knowledge and wisdom are gained through more and more reading. Although Srilanka are considered to have a high

literacy rate compared with other Asian countries, our reading habit very poor.

The general knowledge of most people is quite low us a result of poor reading habit. We acquire most habits by countint them over many years. Therefore, to cultivate the habit of reading, the best age to start is the school going age.

While helping man to be prefect, reading also helps to build a nation of civilized and disciplined people. It may also help clam minds. as a means of building a prefect nation, the reading habit can be promoted from the cradle to the grave .

**A. Emaranciya - 13^Com^**

## உயர்தர மாணவர் விபரம்

### தரம் - 12 (New Com)

1. றோ.பியூறிக்கா
2. செ.கெனின் நிதுஷா

### தரம் - 12 (New Arts)

1. ஜெ.அன்ரனி பொன்சிவன்
2. செ.தனுசன்
3. அ.றெமேசியன்
4. எ.றினுசன்
5. கி.அஜன்சயன்
6. கொ.நிதர்சனா
7. ப.கஜேந்தினி
8. சா.மேரி டனுசா
9. அ.இனோக்கா
10. ஞா.நிறோஜினி
11. அ.டிலைக்சனா

## தரம் - 12 Com (2016)

1. ச.ஜெஸ்மின்
2. யோ.கிசோத்
3. கெ.விதுசன்
4. பெ.கிளறன்ஸ்

## தரம் - 12 Arts (2016)

1. சா.டிலைக்சன்
2. ய.சஜீவன்
3. யோ.தனுஜன்
4. அ.சிந்துஜன்
5. இ.சுவேந்திரன்
6. எ.மேரி மொணிக்கா
7. ச.மெரின் பெயாற்றா
8. க.தட்சாயினி
9. பி.நிதர்சனா
10. அ.நிசாந்தினி குரூஸ்
11. த.தட்சாயினி
12. செ.நிறோசிக்கா
13. வி.விதுசா
14. ம.கிறிஸ்ரெல்லா

## தரம் - 13 Com

1. செ.ஜோசப் கோமகன்
2. ம.பவுஸ்தீனா
3. செ.மரிய றொடைக்சினி
4. அ.எமறன்சியா
5. உ.சோபியா
6. கி.நிறோசா

## தரம் - 13 Arts

1. கு.டிலைக்சன்
2. செ.மில்ரன் துசித்
3. மெ.ஜோசப் குரூஸ்
4. கி.அந்தோனி
5. ம.பிரியாந்தினி
6. இ.சிந்துஜா
7. கே.கெனஜ்கிவானி
8. யே.ஜெனோ நிருசிக்கா
9. ப.நிறஞ்சினிதேவி
10. செ.பிரசாந்தினி
11. ஜெ.பவித்திரா
12. ச.ஜெரன்சியா

ஒன்றியத் தலைவர் - யோ. கிஷோத்
செயலாளர் - க.தட்சாயினி

உயர்தர வர்த்தகப்பிரிவு மாணவர்கள் பாட ஆசிரியர்களுடன் - 2016



உயர்தர கலைப் பிரிவு மாணவர்கள் பாட ஆசிரியர்களுடன் - 2016



# நன்றியுரை



''தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாகக் கொள்வர் பயன்
தெரிவார்''

உயர்தர மாணவ ஒன்றியத்தால் வெளியிடப்படும் விம்பம் எனும் 5ஆவது சஞ்சிகையானது சிறந்த முறையில் வெளிவர உதவிய எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றிகள்.

ஐந்தாவது முறையாகவும் இச் சஞ்சிகையை வெளியிட வேண்டும் என்ற ஊக்கத்தையும், அறிவுரையையும் அளித்து எங்கள் கனவினை நனவாக்கிய எம் பாடசாலையின் அதிபர் அருட்.சகோ. ஜோசப் அகஸ்ரின் அவர்களுக்கும் கூடவே அவருடன் இணைந்து ஒத்தாசை வழங்கிய எமது பாடசாலையின் பிரதி அதிபர் மற்றும் பல வழிகளிலும் உதவிய எம் ஆசிரியர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இரவு பகல் பாராது அயராது உழைத்த இவ் வெளியீட்டுக் குழுவின் பொறுப்பாசிரியர் திரு.சூ.அன்ரன் சில்வெஸ்ரர் அவர்களுக்கும், இச் சஞ்சிகையினை கணினி வடிவமைப்புச் செய்த ஆசிரியர் திரு.J.T.சிம்சன் அவர்களுக்கும் அத்துடன் இச் சஞ்சிகையினை தட்டச்சு செய்த மாணவர்களான ய.சஜீவன் ச.மெரின் பெயாற்றா அவர்களுக்கும் தட்டச்சு திருத்தங்களை மேற்கொண்ட ஆசிரியர்களான திருமதி.C.T.சதீஸ்வரன் வாஸ், திருமதி. J.C.றொபினா கிறிசாந்தி அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்

உயர்ந்த மனதோடு ஆசிச் செய்தியை எமக்கு வழங்கியவர்களுக்கும் எமது மனம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்த நூல் சிறந்த முறையில் வெளிவர வேண்டுமென்று தமது ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும், இந் நூலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த உயர்தர மாணவ ஒன்றியத்திற்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்.

**யே.ஜெனோ நிருசிக்கா**

செயலாளர்
உயர்தர மாணவர் ஒன்றியம

